முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**08.11.2021**, திங்கட்கிழமை

1. தருமனே ஞான தேசிகனே
தணிகாசலன் வரமாக வந்த
ஆறுமுக அரங்கமகா ராஜனே
அகிலமதில் உன் பெருமை கூறி

2. கூறியே பிலவ துலை திங்கள்
குறைவிலா இருபானீர்திகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 22ம் நாள், 08.11.2021 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் வழி உலகமாற்றம் காண

3. காணவே விசுவாமித்திரரும் உரைப்பேன்
கலிகாலத் துன்பச் செயலாக
ஞானமிலா பொய்யில் புரண்டு
நம்பிக்கை வழி துரோகம் செய்து
(பொருள்பற்று உள்ள சிலர் கூட்டாளிகளுக்கே நம்பிக்கை துரோகம் செய்வார்கள். நம்பிக்கை துரோகம் செய்பவர்கள் பண ஆசை உள்ளவர்கள்தான்.)

4. செய்து பொருள் தன பற்றில்
சித்தம் மயங்கி அலைந்து
மெய்வழி தேடா பதர்களே
மேலான வழிகள் பல இருந்தும்

5. இருந்தும் கதவடைத்தாற் போல்
எண்ணம் செயலில் குரோதம்
வருந்தா வஞ்சம் சூழ்ச்சிவழி
வக்கிரமாய் வாழும் பதர்களே
(தனக்கு உள்ள நல்வழி பாதையை தானே அடைத்துக் கொள்வான். தான் செய்த பாவங்களை எண்ணி வருந்த மாட்டான் இவர்கள் மனிதர்கள் அல்ல. மனித பதர்கள்.)

6. பதராகி பதவி மோகம் வழி
பணத்தாசை வழி மோகமாகி
பாதகம் புரிகின்ற மானிடர்களே
பாதையை மாற்றி மனதை தேற்றி

7. தேற்றி இவை செயல்புரிவோர்
தேசிகன் ஞானவழி வந்துவிடுங்கள் (பாவங்களை தீர்க்கும் இடம் ஓங்காரகுடில் ஆகும்)
மாற்றம் கண்டுவிடா விட்டால்
மரணமிடர் மறுமை என தொடர்ந்து

8. தொடர்ந்து பலபிறவி கண்டு
துன்பகதி எனும் நரகத்தில்
இடர்பல கண்டு வாடநேரும்
யுகத்தில் இவர்கள் மேலே

9. மேலாக நச்சுக்கிருமி இடர்
மேன்மையிலா உயிர்பலி கண்டம்
(பாவிகளுக்கு நச்சு கிருமிகளாலும் நோயினாலும் விபத்தினாலும் மரணம் வரும். முருகப்பெருமானின் கட்டளைப் படியே இவர்களுக்கு இந்த கதி நேரும்.)
காலனை ஏவி நடக்க நேரும்
கண்டிடா உயிர் பாதுகாப்புக்கு

10. காப்பான ஞான வாழ்வுக்கு
கண்டுரைப்பேன் அமைதிநிறைவு
காப்புடன் வாழ்வாதாரம் சிறந்து
கடைத்தேற்றம் ஈதூழே (இந்த ஜென்மத்தில்) கண்டிட

11. கண்டிட அரங்கஞானி வழி
கண்டுமே தீட்சை ஆசிபெற
உண்டாகும் பற்றில்லா வாழ்வாய்
உயர்ந்து பெரும் பேறு காணும்
(துறையூர் ஓங்காரக்குடில் வரும் மக்களுக்கு பேராசை இருக்காது, பொறாமை குணம் இருக்காது, நம்பிக்கை துரோகம் செய்ய மாட்டார்கள். பிறரை வஞ்சிக்க மாட்டார்கள் இன்னும் பல தீய குணங்களும் நீங்கிவிடும்.)
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

மகான் விசுவாமித்திரர் மகான் வஷிஷ்டமகரிஷியிடம் "பிரம்ம ரிஷி" என்ற பட்டத்தை பெற்றவர் ஆவார். மன்னராக வாழ்ந்தவர் தான் மகான் விசுவாமித்திரர். மகான் வஷிஷ்ட மகரிஷியிடம் ஆசி பெற்றதால் தான் நல்ல குணங்கள் பெற்று மகான் நிலையடைந்தார்.

நிலையில்லா வாழ்வு பெற்ற மனிதர்கள், பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்வோம் என்ற கற்பனையில் மூழ்கி மேலும் மேலும் கொள்ளையடித்து நரகத்தில் வீழ்வார்கள்.

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**

**–திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 331.**

அறிவில்லாதவன் வாழ்வை நிலையானது என்று நம்புவான்

**நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 336.**

நேற்று நல்ல திடமாக இருந்த ஒருவன் இன்று இறந்துவிட்டான் என்ற செய்தியை கேள்விப்படுவது உலகம் முழுவதும் உள்ளது. இப்படி இருப்பது தெரிந்தும் மனிதர்களுக்கு இதை உணர முடியாத அறிவு இருக்கிறது.

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 337.**

அடுத்த நொடி உயிரோடு இருப்போமோ என்று தெரியாத மனிதர்கள் நீண்ட கற்பனையில் மூழ்கி இருப்பார்கள். இவர்கள் அறியாமையில் உள்ளவர்கள், இவர்களெல்லாம் அருள்கடலாக, அறிவு கடலாக உள்ள முருகப்பெருமானை "**ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி**" என்றோ "**ஓம் சரவண ஜோதியே நமோ நம**" என்றோ ஒருமுறை சொன்னாலே அவர்களுக்கு அறிவு தெளிவடையும்.

தயைசிந்தை உள்ள மனிதர்களே முருகப்பெருமானின் ஆசியை பெற்றவர்கள் ஆவார்கள். நிலையில்லா வாழ்வு பெற்ற மனிதர்கள், பண ஆசை காரணமாக நம்பிக்கை துரோகம் செய்வார்கள், வஞ்சனை செய்வார்கள். இவர்களால் நாட்டுக்கு கேடு உண்டாகும். இவர்கள் பதவியில் அமர்ந்தால், அந்த பதவியைக் கொண்டு மேலும் மேலும் பணம் சேர்க்க முயற்சிப்பார்கள்.

இந்த மாதிரி கொடிய பாவிகளுக்கு முருகப்பெருமான் நச்சு கிருமிகளாலும், விபத்தினாலும், கொடிய நோயினாலும் மரணத்தை உண்டாக்கும்படி செய்வார். இவர்கள் துன்பமில்லாமல் வாழ விரும்பினால், துறையூர் ஓங்காரக்குடில் வந்து ஓங்காரக்குடிலாசானிடம் சரணாகதி அடைய வேண்டும்.

துறையூர் ஓங்காரக்குடில் மனித வர்க்கத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். துறையூர் ஓங்காரக்குடிலில் சுமார் 40 ஆண்டுகளாக உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் ஆசியாலும் மகான் இராமலிங்க சுவாமிகளின் ஆசியாலும் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்று வரும் ஓர் அற்புத இடமாகும்.

**நாட்டமாம் வேலவனை நாளும் போற்றிட**
**வாட்டமும் இல்லை மனமும் செம்மையே!**

**அம்மை பார்வதி அருந்தவ புதல்வனே**
**நம்மையும் காத்து நாட்டையும் காப்பான்!**

**ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட**
**ஏற்றமே வாழ்வில் இன்பமும் உண்டாம்!**

**பற்றற்ற வேலவன் பதத்தைப் பற்றிட**
**நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!**

**எந்தை வேலவன் இணையடி போற்றிட**
**சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே!**

**வேத தலைவன் வேலனைப் போற்றிட**
**பாதமே துணையென பகர்வர் நல்லோர்!**

**– ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்.**